

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (6.6.2023) முகாம் அலுவலகத்தில், IPL – 2023 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றதையொட்டி அக்கோப்பையை இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் என். சீனிவாசன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முழு நேர இயக்குநர் திருமதி ரூபா குருநாத் ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட் தலைமை செயல் அலுவலர் காசி விஸ்வநாதன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் பெருநிறுவன விவகார அலுவலர் கே.எஸ். பாலாஜி, கோபிநாத் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.6.2023) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டதற்காக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் சென்னை, தேனாம்பேட்டை, விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை திறந்து வைத்து மருத்துவப் பரிசோதனை செய்வதை பார்வையிட்டார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வேளச்சேரியில் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு கட்டடம்!

# அடையாறு மண்டலம் - அண்ணா சாலையில் புதிய பூங்கா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன்.7-

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் அடையாறு மண்டலத்திற்குட்பட்ட அண்ணா சாலையில் புதிய பூங்கா அமைக்கும் பணியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, எல்.டி.ஜி. சாலை மற்றும் வேளச்சேரி பிரதான சாலையில் ரூ.30.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு கட்டடம் மற்றும் நியாயவிலைக் கடைகளை திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு169க்குட்பட்ட அண்ணா சாலையில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கும் பணியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.06.2023) அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார் அவர்களின் 169ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், எல்.டி.ஜி. சாலை மற்றும் வேளச்சேரி பிரதான சாலையில் முறையே ரூ.14.50 இலட்சம் மற்றும் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு கட்டடம் மற்றும் நியாயவிலைக் கடைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

எல்.டி.ஜி. சாலையில் அமைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடையில் 1595 குடும்ப அட்டைதாரர்களும், வேளச்சேரி பிரதான சாலையில் அமைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடையில் 415 குடும்ப அட்டைதாரர்களும் பயன் பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி. அமித், மண்டலக்குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, மண்டல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

